# தலைவாசல்
Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 12 | thalaivaasaltv@gmail.com | வியாழக்கிழமை | ஒக்ரோபர் 08, 2020



## சிலாபம் வைத்தியசாலையில் நோயாளி ஒருவருக்கு கோரோனா

சிலாபம் ஆரம்ப வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை 03

## கொக்கல தனிமைப்படுத்தல் முகாமிலிருந்த 34 பேருக்கு கொரோனா!

மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிய நிலையில் கொக்கல ஹோட்டலொன்றில் தனிமைப்படுத்தப்பட்ட 300 ஊழியர்களில் 34 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது பி.சி.ஆர் பரிசோதனைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

அவர்கள் ஐ.டி.எச் மற்றும் மாலபே நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.



## கொழும்பு சென். பிரிஜேட்ஸ் கல்லூரி மாணவியின் பெற்றோருக்கு கொரோனா!

கொழும்பு சென்.பிரிஜேட்ஸ் கல்லூரியின் மாணவியின் பெற்றோருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. அவர்களது குடும்ப உறுப்பினர்கள் சுகாதார பரிசோதனைகள் செய்துள்ளதாகவும் பாடசாலையின் சுகாதார ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பாடசாலைச் சமூகம் அறிவித்துள்ளது.

இதேவேளை ஐ.சி.பி.டீ கல்லூரியின் மாணவர் ஒருவருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக அக்கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது.

## ஊரடங்கு உத்தரவு தொடர்பில் முகநூலில் வதந்தி பரப்பியவர் கைது

சமூக வலைத்தளங்களின் ஊடாக ஊரடங்கு உத்தரவு தொடர்பில் பொய்யான தகவல்களை வெளியிட்ட இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

18 வயதுடைய இளைஞன் ஒருவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த இளைஞன் ஜனாதிபதி செயலக லெட்டர் ஹெட்டினையும் மற்றும் கொழும்பு ஊடகம் ஒன்றின் லோகோவினையும் பயன்படுத்தி குறித்த பொய்யான தகவல்களை வெளியிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ்.பல்கலைகழகத்தில் குழப்பம்!

**“துணைவேந்தர் எம்மை தாக்கினார்”**
**“மாணவர்கள் என்னை தள்ளிவிழுத்தினர்”**
**,ரு தரப்பும் மாறி மாறி குற்றச்சாட்டு**



யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீட இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் இடையே ஏற்பட்ட மோதல் உச்சக் கட்டத்தையடைந்த போது சமர முயற்சியில் ஈடுபட்ட துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறீ சற்குணராசா தள்ளி வீழ்த்தப் பட்டதாக அவர் தரப்பு தகவல்களும் அடிதடியை தடுப்பது தொடர்பாக யாழ்.பல்கலைகழக துணைவேந்தரிடம் தெரிவித்து 03

## வவுனியாவில் விபத்து இருவர் பலி!

வவுனியா, மடுகந்தைப் பகுதியில் வீதியை விட்டு விலகிய மோட்டர் சைக்கிள் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் மரணமடைந்துள்ளனர்.

இன்று (08) மாலை 5.15 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில், வவுனியாவில் இருந்து ஹொரவப் பொத்தானை நோக்கி வேகமாக சென்ற மோட்டர் சைக்கிள் மழை காரணமாக வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டர் சைக்கிளில் பயணித்த இருவரது தலையிலும் பலத்த 03

## சமூக மட்டத்தில் கொரோனா தொற்று அடுத்த 7 நாட்கள் தீர்மானம் மிக்கவை



இலங்கையில் பல பகுதியில் சமூக மட்டத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டிருக்கும் நிலையில் அடுத்த 7 நாட்கள் தீர்மானம் மிக்கவை என இராணுவ தளபதியும் கொரோனா தடுப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம், அநுராதபுரம், பதுளை, காலி, குருநாகல், மொனராகலை, புத்தளம் கேகாலை, களுத்துறை, கண்டி, மாத்தறை, பொலன்னறுவை, மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் கடந்த 4 நாள்களில் கோவிட் -19 நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். 03

## யாழில் நிகழும் வன்முறைகள் பிரான்ஸிலிருந்து கட்டளையிடப்படுகிறதாம்

யாழ்ப்பாணத்தில் அண்மைய நாள்களில் இடம்பெற்ற வாள்வெட்டு வன்முறைகளுடன் தொடர்புடைய ஒருவர் சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வன்முறைகளின் பிரதான சூத்திரதாரிகள் ஒட்டுமடம் சுமனின் வீட்டுக்கு முன்பாக வைத்து சந்தேக 03

## காணாமல் போன மகனைத் தேடிய தாய் மரணம்

வவுனியாவில் காணாமல் போன தனது மகனைத் தேடிவந்த தாய் ஒருவர் சுகவீனம் காரணமாக மரணமடைந்துள்ளார். வவுனியா மகறம்பைக்குளம் பகுதியை சேர்ந்த பெரியசாமி மனோன்மணி வயது 70 என்ற தாயே இன்றையதினம் மரணமடைந்துள்ளார்.

இவரது மகன் பெரியசாமி செல்வகுமார் வயது 45 கடந்த 2008 ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்.

அவரைத்தேடி வவுனியாவில் 1328 நாட்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்திலும் குறித்த தாய் கலந்து கொண்டு தனது மகனை 03

**தரணி எங்கும் தமிழராய் இணைவோம்**

# பாராளுமன்ற ஊழியர் ஒருவரின் குடும்ப உறுப்பினருக்கு கொரோனா



பாராளுமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் ஊழியர் ஒருவரின் குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாபா அபேவர்தன இன்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் டி சில்வா இன்று சபையில் தமது தேவைக்காக பாராளுமன்ற அலுவல்கள் சேவைப்பிரிவிற்கு சென்றபோது அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று கூட்டிக்காட்டியபோதே சபாநாயகர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற அலுவுல்கள் சேவைப்பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவரின் குடும் உறுப்பினருக்கு கொவிட்- 19 வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிசெய்யபட்டுள்ளமையால் வெளிநபர்கள் இதில் பிரவேசிப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

# தாதி மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு



தாதி மாணவர் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ளவர்களுக்கான தகுதிகளை பரிசோதனை செய்வதற்கான நேர்முகப் பரீட்சை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப்பரீட்சை மீண்டும் அறிவிக்கும் வரையில் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சின் ஊடக பிரிவு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கான

# பி.சி.ஆர். பரிசோதனை நிறைவு

மினுவாங்கொடை பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் அடையாளம் காணப்பட்ட கொவிட் - 19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 1034 ஆகும் என்றும் அவர் கூறினார். இன்று (08) காலை சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தில் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் நேற்று பெறப்பட்ட மாதிரிகள் மூலமான பெறுபேறுகள் தற்பொழுது கிடைத்து வருவதாகவும் அவர் கூறினார்.

இந்த தகவல்களை உறுதி செய்த பின்னர் நோயாளர்களின் எண்ணிக்கையை தெரிவிக்க முடியும். காசல் மகளிர் வைத்தியசாலையில் கற்பிணிப் பெண்ணிற்கு கொவிட் - 19 தொற்று ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பெண் ஆடைத் தொழிச்சாலைக்கு சேவைகளை வழங்கும் மற்றுமொரு நிறுவனத்தில் பணியாற்றுபவர் என்றும் இவர் பிரண்டிக்ஸ் நிறுவனத்துடன் தொடர்பு பட்ட கொவிட் - 19 கொத்தணி நோயாளர் என்ற ரீதியில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதுவரையில் சம்பந்தப்பட்ட பெண் பணியாற்றிய நிறுவனத்தில் அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு இன்று உட்படுத்தப்படுகின்றனர். அடையாளம் காணப்பட்ட பல நோயாளர்கள் தற்பொழுது வைத்தியசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும்சிலரைவைத்தியசாலைகளில் அனுமதிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அங்கொடை தொற்றுநோய் தேசிய மத்திய நிலையம், வெலிகந்த வைத்தியசாலை, இரணவில வைத்தியசாலை, மினுவங்கொடை வைத்தியசாலை, காத்தாங்குடி தெல்தெணிய நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை, முல்லேரியா, அம்பாந்தோட்டை, ரம்புக்கன மற்றும் கம்புறுகம ஆகிய வைத்தியசாலைகளிலேயே அனுதிக்கப்பட்டுள்ளனர்.

# கொரோனா குற்றச்சாட்டை நிராகரித்தது பிரண்டிக்ஸ்




நிறுவனத்தில் கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்ட பின்னர், நிறுவன ஊழியர்களை பணிக்கு வருமாறு வற்புறுத்தப்பட்டதாக பரவும் வீடியோ காட்சியை நிராகரிப்பதாகத் தெரிவித்துள்ள ப்ரெண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை நிறுவனம் குறித்த காணொளியில் தோன்றும் யாரும் ப்ரெண்டிக்ஸின் ஊழியர்கள் அல்ல எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ப்ரெண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை நிறுவனம் இன்று வெளியிட்ட அறிக்கையில்,

இந்தியர்கள் அல்லது வேறு எந்த வெளிநாட்டினரும் மினுவாங்கொடவிலுள்ள எமது தொழிற்சாலைக்கு அண்மைய காலகட்டத்தில் வந்திருக்கவில்லையென்பதை உறுதி செய்கிறோம். இதேபோல, இந்தியாவிலிருந்து எந்த துணி வகைகளையும் கொள்வனவு செய்யவோ, அவற்றை பாவிக்கவோ இல்லையென்பதையும் உறுதி செய்கிறோம்.

இந்தியாவிலுள்ள ப்ரெண்டிக்ஸ் நிறுவன கிளையில் பணியாற்றி நாடு திரும்பிய எமது ஊழியர்கள் யாரும் மினுவாங்கொட தொழிற்சாலைக்கு வரவில்லை.

## மட்டக்களப்பில் துஸ்பிரயோகத்திற்கு உள்ளான

# சிறுமி தற்கொலை முயற்சி!



மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உப்படுத்தப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி ஒருவர் அங்கிருந்து தப்பித்து கல்லடி பாலத்தில் இருந்து வாவியில் குதித்து தற்கொலை செய்ய முற்பட்டபோது இராணுவத்தினரால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வவுணதீவு பிரதேசத்தை சேர்ந்த 17 வயது சிறுமி 22 வயதுடைய ஆயித்தியமலை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை காதலித்து வந்துள்ளார். இந்த நிலையில் சம்பவ தினமான கடந்த 4 ம் திகதி இரவு 11 மணியளவில் காதலன் சிறுமியை கையடக்க தொலைபேசியில் தொடர்பு கொண்டு வீட்டில் இருந்து வெளியில் வருமாறு அழைப்பு விடுத்துள்ளான்.

இதனையடுத்து குறித்த சிறுமி வீட்டின் வெளிப்பகுதில் நின்றிருந்த போது அங்கு மது போதையில் அவளுடைய காதலன் மற்றும் காதலனின் நண்பர்கள் வந்திருந்ததாகவும் அப்போது சிறுமியை வீதிக்கு வருமாறு அழைத்த போது சிறுமி வரமுடியாது என தெரிவித்த நிலையில் காதலனின் நண்பர்கள் இருவர் சிறுமியின் வாயை பொத்தி அவரை வீட்டின் வேலிப்பகுதியில் இருந்து தூக்கி கொண்டு அருகிலுள்ள காட்டிற்கு கொண்டு சென்றுள்ளனர்.

இந்த நிலையில் சிறுமியின் காதலன் சிறுமியை முதலில் பாலியல் பலாத்காரம் செய்ததுடன் பின்னர் அவரின் நண்பன் ஒருவன் சிறுமியை பலாத்காரம் செய்ய முற்பட்ட போது சிறுமி அவனின் கையை வாயால் கடித்துவிட்டு அங்கிருந்து வீட்டிற்கு தப்பி ஓடியுள்ளார்..

இதன் பின்னர் கடந்த 05 திகதி திங்கட்கிழமை பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட் சிறுமியின் உறவினர்கள் முறைப்பாடு செய்ததையடுத்து சிறுமி மட்டு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கபட்டதுடன் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான சிறுமியின் காதல் மற்றும் நண்பர்கள் தலைமறைவாகியுள்ளனர் என பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறுமி கடந்த 06 ம் திகதி இரவு வைத்தியசாலையில் இருந்து தப்பி மட்டக்களப்பு கல்லடி பாலத்தின் மேல் இருந்து ஆற்றில் குதித்த நீந்திய போது அங்கு கடமையில் இருந்த இராணுவத்தினர் உடனடியாக செயற்பட்டு அவரை காப்பாற்றி வைத்தியசாலையில் அனுமதித்தனர் .

இதேவேளை தலைமறைவாகி வந்த சிறுமியின் காதலன் மற்றும் அவருடைய நண்பர்கள் இருவர் உட்பட 3 பேரை இன்று (08) கைது செய்துள்ளதாகவும் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.





# பாடசாலையின் தேவைகள் தொடர்பில் ஆராய்வு

யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தின் அதிபர், பாடசாலை அபிவிருத்தி சங்கம், பழைய மாணவர்களின் அழைப்பின் பேரில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையிலான குழுவினர்

குறித்த பாடசாலைக்கு இன்று (08.10.2020) நேரில் விஜயம் செய்து அவர்களின் தேவைகள் தொடர்பில் அதிபர், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசித்தனர்.

இக் கலந்துரையாடலில் பாடசாலை வாட்டார தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் பத்மமுரளி மற்றும் யாழ் மாநகர சபை உறுப்பினர்கள் சிவகந்தன் தனுஜன், இரத்தினசிங்கம் யெனன், மகேந்திரன் மயூரன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிர்வக செயலாளர் திரு பத்மநாதன் விளையாட்டு துறை பொறுப்பாளர் திரு வீரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களில் அடுத்த சில நாட்களில் பிற்பகல் வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் உயர்வாகக் காணப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப் படுகின்றது.

சில இடங்களில் 100 மி.மீ ற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப் படுகின்றார்கள்.

# இஸ்லாமியர்களுக்கு முக்கிய அறிவிப்பு



முஸ்லிம் பள்ளிவாசல்களுக்குள் இடம்பெறும் தொழுகையின் போது ஒரு தடவையில் 50 பேர் மாத்திரமே உள்வாங்கப்பட வேண்டுமென முஸ்லிம் சமய விவகார திணைக்களம் அறிவுருத்தியுள்ளது.

புத்தசாசன மற்றும் மதவிவகார அமைச்சின் கீழ் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## சிலாபம்...

உறுதி செய்யப்பட்டுள்ளது.

நோயாளியிடம் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவருக்கு கோரோனா வைரஸ் இன்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர் தற்போது இரணவில கோவிட் -19 சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## காணாமல் போன...

கண்டுபிடித்து தர போராடிய நிலையில் மகனை காணாமலேயே அவர் இன்று மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமது பிள்ளைகளைத் தேடிய இரு தந்தைமார் வவுனியாவில் அண்மையில் மரணமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில்...

காயங்கள் ஏற்பட்ட நிலையில் உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப் பட்டபோதும் அவர்கள் இருவரும் மரணமடைந் திருந்தனர்.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளின் சாரதியான 41வயதுடைய முகமது மாகீர் மற்றும் அவரது நண்பர் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

## யாழ். வன்முறைகள்...

நபர் இன்று கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடம் கைப்பற்றப்பட்ட அலைபேசியில், பிரான்ஸில் தங்கியுள்ள நவாலியைச் சேர்ந்த நிரோஷ் என்பவரே பல வன்முறைச் சம்பவங்களை அங்கிருந்து கொண்டு இயக்குவதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், கிளிநொச்சியில் தலைமறைவாகியிருக்கும் ஒட்டுமடம் சுமன், அங்கு தாக்குதலை நடத்த திட்டமிட்ட நிலையில் அவரது சகா கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று அவரது கொக்குவில் வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் சிறப்பு அதிரடிப் படையினரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப் பட்டுள்ளார்.

கடந்த 26ஆம் திகதி யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் வைத்து மானிப்பாயைச் சேர்ந்த தனுரொக் என்ற இளைஞன் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் நீர்வேலி, இணுவில், உடுவில், மானிப்பாய் மற்றும் ஒட்டுமடத்தில் வன்முறைகள் இடம்பெற்றமை குறிப் பிடத்தக்கது.

## யாழ். பல்கலைக்கழகத்தில்...



சுமுகமாக தீர்ப்பதற்காக முயற்சித்தபோது துணைவேந்தர், விரிவுரையாளர்கள் சிலர் மற்றும் காவலாளி ஆகியோர் இணைந்து தம்மீது தாக்குதல் நடத்தியதாக மாணவர்கள் தரப்பும் மாறி மாறி குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று மாலை இடம்பெற்றது. கலைப்பீட மாணவர்களுக்கு இடையேயான மோதலால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்துக்குள் பரபரப்பான நிலை காணப்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பாக தெரிவித்த மாணவர்கள், பல்கலைகழக நிர்வாகத்தை நாடி தர்க்கத்தை சுமுகமாக தீர்க்க முயன்றபோது காவலாளி மற்றும் விரிவுரையாளர்கள், காவலாளி ஆகியோர் இணைந்து தாக்குதல் நடத்தியதாகவும்,

துணைவேந்தர் தம் மீது தாக்குதல் நடாத்தியதில் கழுத்தில் தனக்கு காயம் ஏற்பட்டதாக கூறி மாணவன் ஒருவர் கழுத்தில் காயத்தையும் காண்பித்ததார்.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் பல்கலைகழக வாயிலில் போராட்டம் நடத்தும் மாணவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் பல்கலைகழகத்திற்குள் அதிரடிப்படை மற்றும் பொலிஸாரை இறக்கி அடிப்போம்,

சுடுவோம் என துணைவேந்தர் அச்சுறுத்தியதாகவும், அதற்கான வீடியோ ஆதாரம் தங்களிடம் உள்ளதாகவும் கூறியிருக்கின்றனர். சம்பவத்தையடுத்து யாழ்.பல்கலைகழக சுற்றாடலில் பொலிஸார் குவிக்கப்பட்டிருக்கின்றனர்.

## சமூக மட்டத்தில்...

சர்ச்சைக்குரிய மினுவங்கொட தொழிற்சாலையில் பணியாற்றிய பலர் கொழும்பில் ஒளிந்திருக்கின்றனர் சுகாதார நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப் படாத ஊழியர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் 0113456548 என்ற இலக்கத்திற்கு அழைப்பு விடுக்குமாறு

இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா கேட்டுள்ளார்.

## கொழும்பு மகளிர் மருத்துவமனையில் கர்ப்பிணி பெண்ணுக்கு கொரோனா

கொழும்பு, காசல் வீதி மகளிர் மகப்பேற்று மருத்துவமனையில் கர்ப்பிணிப் பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண், சுவாசக் கோளாறு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், மினுவாங்கொட கொரோனா தொற்று பரவலுக்கும் இந்தப் பெண்ணுக்கும் ஏதேனும் தொடர்புகள் உள்ளதா என்பது குறித்து விசாரணைகள் நடந்து வருவதாக மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

## தேசிய பூங்காக்களுக்கான பொது நுழைவு நிறுத்தம்!



மறு அறிவித்தல் வரும் வரை நாடு முழுவதும் உள்ள தேசிய பூங்காக்களுக்கான பொது நுழைவு நிறுத்தப்பட்டுள்ளது.

வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதுமான கொரோனா நிலைமைகளை கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



## மினுவாங்கொட பொலிஸ் நிலைய உணவக உரிமையாளருக்கு கொரோனா

மினுவாங்கொட பொலிஸ் நிலையத்தில் உணவகமொன்றை நடத்திவந்த 55 வயதுடைய ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவரது மகன் ப்ரெண்டிக்ஸ் நிறுவனத்தில் கடமையாற்றி கொரோனா தொற்றுக்குள்ளானவர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் மினுவாங்கொட பொலிஸ் நிலையத்தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

இவரின் சிறிய தாயாருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையினைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

## ஆறு மாகாணங்களில் அனைத்து கல்வி வகுப்புகளுக்கும் தடை!



கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஆறு மாகாணங்களில் அனைத்து கல்வி வகுப்புகளையும் மறு அறிவித்தல் வரை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேல், மத்திய, தென், ஊவா, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களுக்கே இவ்வாறு அந்தந்த மாகாண ஆளுநர்களின் உத்தரவின் பேரில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி, மன்னாரில் ரயிலுடன் மோதி இருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி மற்றும் மன்னாரில் இருவேறு சம்பவங்களில் ரயிலுடன் மோதுண்டு இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி, கொழும்பில் இருந்து மன்னார் நோக்கிச் சென்ற ரயிலில் மோதி இன்று (வியாழக்கிழமை) காலை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னார் சௌத்பார் ரயில் நிலையத்தில் இருந்து சுமார் நூறு மீற்றர் தொலைவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் 45 வயது மதிக்கத்



தக்கவர் என தெரியவருவதுடன் சடலம் மன்னார் பொது வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பிலிருந்து யாழ். நோக்கி இன்று காலை பயணித்த ரயிலில் மோதுண்டு 45 வயது மதிக்கத்தக்க ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளதுடன் உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த விபத்துக்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஊரடங்கு இல்லாத பகுதிகளில் 16 கொரோனா நோயாளர்கள்

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் தவிர்ந்த நாட்டின் வெவ்வேறு மாவட்டங்களில் 16 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

குறித்த 16 கொரோனா நோயாளர்களும் 2 நாட்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கம்பஹா, யாழ்ப்பாணம், மாத்தளை, அம்பாறை உள்ளிட்ட சில மாவட்டங்களில் கொரோனா தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா நெருக்கடி நிலைகாரணமாக நோய்த்தொற்று அபாயம் அதிகம் உள்ள மாவட்டமான கம்பஹா மாவட்டத்தின் 18 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விமான நிலையத்திற்குள் பிரவேசிப்பவர்களுக்கான அறிவிப்பு

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்குள் நுழையும்போது அனைத்து ஊழியர்களும் வெளிச் செல்லும் பயணிகளும் பி.சி.ஆர். சோதனை முடிவினை வைத்திருப்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

விமான நிலைய உழியர் ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை நேற்றைய தினம் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (லங்கா) நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெளிச் செல்லும் அனைத்து பயணிகளும் 72 மணி நேரத்திற்கு மேல் இல்லாத பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளை வைத்திருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.


அதுதவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைத்து செயற்பாட்டு ஊழியர்களிடமும் பி.சி.ஆர் சோதனைகள் நடத்தப்படும் எனகுறித்த நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

## வட மாகாண குத்துச்சண்டை போட்டியில் முல்லைத்தீவு ஆதிக்கம்

நடப்பாண்டுக்கான வட மாகாண குத்துச்சண்டை போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட பெண்கள் அணியினர் முதலிடத்தையும், ஆண்கள் அணியினர் இரண்டாமிடத்தைப் பெற்று ஆதிக்கம் செலுத்தியுள்ளனர்.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் முல்லைத்தீவு வித்தியானந்த கல்லூரியில் 02ஆம் திகதி தொடக்கம் 05ஆம் திகதி வரை நடாத்தப்பட்ட இந்த போட்டியில் வடமாகாண அனைத்து மாவட்டங்களுக்கு மிடையிலான குத்து சண்டை போட்டியிலேயே முல்லைத்தீவு மாவட்ட அணியினர் முதலாவது மற்றும் இரண்டாம் இடத்தைப் பெற்று கொண்டுள்ளனர்.

மேலும் பெண்கள் அணியினருக்கான போட்டியில் வவுனியா மாவட்டம் இரண்டா



மிடத்தையும், மன்னார் மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன.

ஆண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை வவுனியா மாவட்டமும், மூன்றாமிடத்தினை மன்னார் மாவட்டமும் பெற்றுக்கொண்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட அணியில் உண்ணாப்பிலவு, தீர்த்தகரை, செல்வபுரம், முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, விஸ்வமடு, கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், மாங்குளம் ஆகிய பிரதேச வீர வீராங்கனைகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.